**O.S.No.256/2017**

**Date : 15.02.2023**

**வா.சா.1 காளிமுத்து**

**1ம் பி.த.கு.வி**

1ம் பிரதிவாதியால் வாய் பேச இயலாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பிறவியிலே வாய் பேச மற்றும் காது கேட்காது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது இடத்திற்கு மேற்கில் 1ம் பிரதிவாதி இடம் வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி முதலில் காத்தப்ப தேவரிடம் 6செண்ட் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட 6 செண்டிற்கும் மேற்கில் 1ம் பிரதிவாதி இடம் உள்ளது ஏ்னறால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது இடத்திற்கு மேற்கில் உள்ள சொத்தினை இரண்டு கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி முதலில் 1989லிலும் 2வதாக 1993லும் கிரையம் பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது- 1ம் பிரதிவாதிக்கு மொத்தம் 10 3/4 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான். அந்த 10 3/4 செண்டில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீட்டிற்கும் மேற்கில் வேறு நபர்கள் வீடு கட்டியுள்ளனர் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் பெற்ற நபர்கள் தாங்கள் கிரையம் பெற்ற இடத்தை விட சுமார் 1, 2 செண்டினை கூடுதலதாக ஆக்கிரமிப்பு செயதுள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்தினை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டார் என்றால் சரிதான். பிராது சொத்து விவரத்தில் 3ம் பிரதிவாதியின் இடத்திற்கும் மேற்கில் தாவா சொத்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**வேண்டுகோளுக்கிணங்க குவி தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**